

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.3.2026) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 177.17 கோடி ரூபாய் செலவில் 35 முடிவுற்ற பணிகளையும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தின் சார்பில் 32.23 கோடி ரூபாய் செலவில் 9 முடிவுற்ற பணிகளையும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 2.50 கோடி ரூபாய் செலவில் பள்ளிக் கட்டடத்தையும் திறந்து வைத்தார். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 16.49 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 25.79 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கும், நகராட்சி நிருவாக இயக்குநரகத்தின் சார்பில் 11.48 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 1 புதிய திட்டப் பணிக்கும் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2026) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத் துறை சார்பில் சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 1843 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 11 சாலைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம், திட்டம் – II மற்றும் சென்னை – கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.1,844 கோடியில் 11 சாலைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 14 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.03.2026) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத் துறை சார்பில் சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திருப்பூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 1843 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 11 சாலைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைத்தார்.**

அதன் விவரம் வருமாறு :-

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலை துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

**முடிவுற்ற 11 சாலைப் பணிகளைத் திறந்து வைத்தல்**

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 985 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் கொங்கணாபுரம் நகருக்கு புறவழிச்சாலை உட்பட 36.395 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக மேம்படுத்தப்பட்ட ஓமலூர்–சங்ககிரி–திருச்செங்கோடு – பரமத்தி சாலை;

நாமக்கல் மாவட்டத்தில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 59 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் 9.15 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட ஓமலூர் – சங்ககிரி – திருசெங்கோடு – பரமத்தி சாலை மற்றும் 65 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் 6.2 கி.மீ நீளத்திற்கு 10 மீட்டர் அகல இருவழிச்சாலையாக திருச்செங்கோடு நகருக்கு புதியதாக அமைக்கப்பட்டுள்ள புறவழிச் சாலை (கட்டம் –I);

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 250 கோடி ரூபாய் செலவில் 11.8 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச்சாலையாக புதியதாக அமைக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் மேற்கு சுற்று வட்ட சாலை மற்றும் 73 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் 8.9 கி.மீ நீளத்திற்கு ஜமீன் ஊத்துக்குளி (மா.சா.எண்.19) மற்றும் ஆச்சிபட்டி (தே.நெ.எண்:83) ஐ இணைக்கும் வகையில் 10 மீட்டர் அகல இரு வழிச்சாலையாக அமைக்கப்பட்டுள்ள பொள்ளாச்சி மேற்கு புறவழிச்சாலை;

திருவண்ணாமலை மாவட்டத்தில் 90 கோடி ரூபாய் செலவில் 3 கி.மீ நீளத்திற்கு திருவத்திபுரம் புறவழிச்சாலை உட்பட 7.4 கி.மீ நீளத்திற்கும், 59 கோடி ரூபாய் செலவில் 9 கி.மீ நீளத்திற்கும் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிபடுத்தப்பட்ட ஆற்காடு – திண்டிவனம் சாலை மற்றும் 50 கோடி ரூபாய் செலவில் 5.6 கி.மீ நீளத்திற்கும் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்பட்ட காஞ்சிபுரம் – வந்தவாசி சாலை;

திருப்பூர் மாவட்டத்தில் 87 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் 13.49 கி.மீ நீளத்திற்கும் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிபடுத்தப்பட்ட பழனி – தாராபுரம் சாலை;

திருவாரூர் மாவட்டத்தில் 68 கோடி ரூபாய் செலவில் 5.61 கி.மீ நீளத்திற்கும் (கட்டம்1, பகுதிA) மற்றும் 56 கோடி ரூபாய் செலவில் 6.29 கி.மீ நீளத்திற்கும் (கட்டம்1, பகுதிB) என இரு பகுதிகளாக மன்னார்குடி – திருமாக்கோட்டை – சொக்கணாவூர் சாலை மற்றும் தஞ்சாவூர் – மன்னார்குடி -திருத்துறைப்பூண்டி- வேதாரண்யம் – கோடியக்கரை சாலையை இணைக்கும் வகையில் இரு வழிச்சாலையாக புதியதாக அமைக்கப்பட்டுள்ள மன்னார்குடி சுற்று வட்ட சாலை;

என மொத்தம் 1843 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 11 சாலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம்,திட்டம்–II மற்றும் சென்னை – கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கே.ஜி. சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) ஆர்.சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்!

# வேளச்சேரி - பரங்கிமலை வரையிலான பறக்கும் ரயில் திட்டம்!

## பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

*சென்னை, மார்ச்.14- ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளரும், 12-வது மண்டலக்குழுத் தலைவருமான என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:*

*ஒன்றிய அரசு - மாநில அரசு நிதி ரூபாய் 734 கோடி மதிப்பீட்டில் வேளச்சேரி - பரங்கிமலை வரையிலான பறக்கும் ரயில் திட்டத்தை பரங்கிமலை ரயில்வே நிலையத்தில் இன்று 14.03.2026 சனிக்கிழமை காலை 7.00 மணி அளவில் மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் கழகத் தலைவர் முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், குறு - சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான, தா. மோ. அன்பரசன் அவர்கள் துவக்கி வைக்க வருகை தர இருப்பதால்,*

*ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக டிஜிட்டல் ஏஜெண்டுகள், கழக மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளரும், 12-வது மண்டலக்குழுத் தலைவருமான என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

# சென்னை குடிநீர் வாரியம் சார்பில் குறை தீர்க்கும் கூட்டம்!

## பகுதி அலுவலகங்களில் இன்று நடைபெறுகிறது!

சென்னை,மார்ச்.14–

சென்னை குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 14.03.2026 (சனிக்கிழமை) அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னை குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 14.03.2026 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம்–1 – திருவொற்றியூர், பகுதி அலுவலகம்–2 – மணலி, பகுதி அலுவலகம்–3 – மாதவரம், பகுதி அலுவலகம்–4 – தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம்–5 – இராயபுரம், பகுதி அலுவலகம்–6 – திரு. வி.க.நகர், பகுதி அலுவலகம்–7 – அம்பத்தூர், பகுதி அலுவலகம்–8 – அண்ணா நகர், பகுதி அலுவலகம்–9 – தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம்–10 – கோடம்பாக்கம், பகுதி அலுவலகம்–11 – வளசரவாக்கம், பகுதி அலுவலகம்–12 – ஆலந்தூர், பகுதி அலுவலகம்–13 – அடையாறு, பகுதி அலுவலகம்–14 – பெருங்குடி, பகுதி அலுவலகம்–15 – சோழிங்கநல்லூர்,

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பழைய பல்லாவரம் பகுதியில் தாய்மார்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பட்டாக்கள் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, டி.வி.ராஜா, தாம்பரம் கோட்டாட்சியர் பல்லாவரம் வட்டாட்சியர் ஆகியோர் உடன் இருந்தனர்.

### பொங்கல் பரிசுத் தொகுப்பினை சிறப்பாக வழங்கியதற்காக

# நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க முதல்வர் ஆணை!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தகவல் !



*சென்னை, மார்ச் 14- பொங்கல் பரிசு தொகுப்பினை சிறப்பாக வழங்கியதற்காக நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கான ஊக்கத்தொகையினை ரூ. 3.00 ஆக உயர்த்தி வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் - என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, சாதனை புரிந்து வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற மக்கள் நலம் சார்ந்த திட்டங்கள் அனைத்தையும் மக்களிடத்திலே முழுவதுமாக கொண்டு சேர்க்கும் ஒரு பாலமாக கூட்டுறவுத் துறை விளங்கி வருகிறது.*

*அந்த வகையில், 2026-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு ஆகியவற்றுடன் 3000/ ரொக்கத்தொகை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.*

*அதன்படி, 08.01.2026 முதல் 24.01.2026 வரை நியாயவிலைக்கடைப் பணியாளர்களால் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு சிறப்பாக வழங்கப்பட்டது. பொங்கல் பரிசுத் தொகுப்பினை சிறந்த முறையில் வழங்கியதற்காக நியாயவிலைக் கடைப் பணியாளர்களுக்கு கூடுதல் பணிச் சுமையை ஈடுசெய்யும் விதமாக கடந்த காலங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.0.50 பைசா வீதம் வழங்கப்பட்டு வந்தது.*

*இந்நிலையில், நியாய விலைக் கடைப் பணியாளர்கள் மேற்படி திட்டத்தை எவ்வித புகாருக்கும் இடமின்றி, செவ்வனே செயல்படுத்தியதாகவும் அவ்வகையில் நியாய விலைக்கடை பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.3/ என்ற வகையில் ஊக்கத் தொகை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டார்கள்.*

*நியாய விலைக்கடை பணியாளர்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பினை சிறந்த முறையில் வழங்கியதற்காக, நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ.3/ வீதம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.*

*மேலும் இதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.6,47,43,054/ (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்து எழு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து ஐம்பத்து நான்கு மட்டும்)ஐ வழங்க நிருவாக அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இதன் மூலம் நியாய விலைக்கடை பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி உள்ளார்கள் கூட்டுறவு துறையின் சார்பிலும், நியாய விலைக் கடை பணியாளர்கள் சார்பிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*மேலும் நியாய விலை கடை பணியாளர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.*



தலைமைச் செயலகத்தில் நேற்று (13.03.2026) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்ட ”அன்புக் குழந்தைகளுக்குத் தமிழில் பெயர்கள், ”நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள், ”தமிழ்நாடு பண்பாட்டு மின்நிலவரை ஏடு ஆகிய இணையப் பக்கங்களை தொடங்கிவைத்தார். இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், எல்காட் மேலாண் இயக்குநர் மரு. கே.பி. கார்த்திகேயன், எல்காட் செயல் இயக்குநர் திருமதி வி. தீபனாவிஸ்வேஸ்வரி, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் (பொ) ரெ. கோமகன் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர்.